# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூரு] யாழ்ப்பாணம்:- நந்தன வரு ஆனிமீ எ உ வெள்ளிக்கிழமை (20 June 1952) [இல - உ௦]


# திருக்குறள் காட்டுந் தெய்வ நெறி

## செந்நாவலரின் - - உண்மை உரை

### பண்பின்மையாற் பெறுங் கேடுகள்

பசியிருந்தவர் உணவைக்கண்ட உடனேஉண்பாரைப்போல, ஆசை மிகுதியாலே தம்மைக் கண்டவுடனே விரும்பப்படும் தோற்றத்தை உடையவராய் இருந்தாலும், நற்குணமில்லாதவராய் இருப்பின் அவர் நட்பைக் கைவிடலே நன்று.

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.

எல்லா உயிர்களுக்கும், பிற உயிர்களோடு, சிநேகமாகச் சேர்ந்து வாழ்தல் இல்லாத தீயகுணத்தை வளர்க்கும் குற்றமாகிய நோயை இகல் என்று கற்றறிந்தோர் சொல்வர். ஒருவனுக்குத் தீய குணம் இருந்தால் வியாதியைப் போல அது தீங்கு செய்யும்.

இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.

தொன்று தொட்டு சான்றோர்களால் சொல்லப்பட்ட நீதிநூல்களைப் படியாதவனும், அந்நூல் வகுத்த காரியங்களைச் செய்யாதவனும், தனக்கு வரும் பழியையெண்ணி விலக்காதவனும், நற்குணமில்லாதவனுமாகிய அரசன் பகையானது அவன் மேற் சென்று படை எடுக்கும் வேற்றரசருக்கு நன்மையாகவே இருக்கும் என்பதே. குற்றமற்ற பண்புடையவர் எவராலும், எக்காலத்தும், இகழவோ, வெறுக்கவோ, வெல்லவோ முடியாது.

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலான் பற்றார்க் கினிது.

பகையென்று சொல்லப்படுந் தீமையைத் தரும் செய்கையை ஒருவன் விளையாட்டினிடத்தாயினும் விரும்பத்தக்கதல்ல. விளையாட்டாக மிகப் பழகியது. முதலில் வெற்றியைக் கொடுத்து முடிவில் சேட்டை யூட்டும்.

பகையென்னும் பண்பிலதனை யொருவன
நகையேயும்வேண்டற்பாற்றன்று.

ஒருவனுக்கு உள்ள பொருளை அளந்து தெரிந்து அப்பொருள முழுதும் தம் கைவசப்படும் வரையில் அன்புடைமை காட்டிப் பேசும் தீக்குணமுடைய பொதுமகளிர் நடத்தையை ஆராய்ந்து, தெளிந்து அவர் இரும்பு விலங்கினின்றும் விடுபடவேண்டும்.

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

சூதாடுங் கழகத்தில் காலங் கழியுமானால் அக் கழிவானது, தம் முன்னோர் சம்பாதித்து வைத்திருந்த செல்வத்தினையும், தன்னுடைய நற்குணங்களையும் கெடுத்துவிடும் என்பதே.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்

பலபேரும்பெற்று பயன் அடைந்து இன்பங்காண முடியாத, செல்வத்தைத் தேடி ஒருவர் வைத்திருப்பினும், அப் பண்பிலாதவர் பெற்ற செல்வம் நல்ல பாலாய் இருப்பினும், நஞ்சை நல்கும் பாத்திரத்தில் ஊற்றப்பெற்ற பால் திரிதற்கே ஒப்பாகும்.

பண்பிலான் பெற்றப் பெருஞ் செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று

நன்மக்கட்கே உரிய குணத்திட்பமில்லாதவர் அரத்தின் கூர்மை போலுங் கூரிய அறிவுடையவராய் இருந்தாலும் அவர் ஓரறிவுடைய மரத்திற்கே ஒப்பாவர்.

அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்.

### இலக்கியங்கள் கண்ட சில பண்பற்றவர்கள்.

உள்ளத்தில் ஒன்று எண்ணி, உதட்டில் ஒன்று வைத்து செய்கையில் மற்றொன்றைச் செய்பவர்கள் பண்பற்றவர்கள். பல காரியங்களைச் சாதிப்பதாக வாய்ப்பறை கொட்டி ஒரு காரியத்தையும் சாதிக்க, வகையற்றவர் வீணர்கள் பண்பற்றவர்கள். ஆழ்ந்த கல்வி கேள்விகளில் குணநலங்களில் சிறந்து வாழும் பேறுடைப் பெருமக்களை, அவமரியாதை செய்து வாழ்வோரும் பண்பற்றவர்கள், அரிய நூல்களைக் கற்றுத் தேராது, தான் கொண்ட கொள்கையே செறியுடையதென எண்ணுபவர் பண்பற்றவர்கள். செல்வம் என்ற கூபினியின் மயக்கதென்ற போதை தலைக்கேறி, மயக்கத்தில் அறிவைப் பகுத் துணர்ந்து வாழத்தெரியாது தத்தளிப்பவர் பண்பற்றவர்கள். உடனிருந்தே நண்பனிடம் பழகிக்கொண்டு, அவனைக் கெடுக்க வழியைக் கோலித் திட்டம் தீட்டும் தீரர்களும் பண்பற்றவர்கள் தான். இதுவே ஒரு சில இலக்கியங்கள் எடுத்துக்காட்டும் பண்பற்றோர் செறியாம்.

இதுவரை பண்பின் பயன்தரு தன்மைகளையும், பண்பின்மைதரும் விளைவிக்கும், பெருங் கேடுகளையும் கண்டோம், திருவள்ளுவ நாயனாரும் பண்பின்மையால் வருங் கேடுகளையே பெரிதும் வற்புறுத்தி எடுத்து விளக்கிச்செல்கிறார். பண்பின் பயன்களைப்பற்றி அதிகம் பேசவே இல்லை. (இவ்விடம் ஆராய்தற்கு உரியது) பண்பால் பெறும் நலன்கள் பலவும்கண்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# இடதுசாரித் தலைவரின் பேச்சுக்கு ஆக்ஷேபம்

## பாராளுமன்றத்தில் விவாதம்

பாராளுமன்றத்தின் விசேஷ உரிமைக்குப் பங்கமுண்டாக்கினார் என்று டக்டர் N. M. பெரேருமீது அரசாங்க கட்சி முதல்வர் சேர் ஜோன் கொத்தலாவல குற்றஞ் சாட்டினார். அக்குற்றச்சாட்டுக்கெதிர் மொழி கூற விரும்புகின்றீரோ வென்று சபாநாயகர் கேட்க டக்டர் பெரேரு "இல்லை" என்று விடையிறுத்தார். அவரை அந்த விவாதத்தின் பொழுது சபையிற் பிரசன்னமாகாதிருக்கும்படி சபாநாயகர் கேட்க டக்டர் பெரேரு அதற்கிணங்கினர்.

"நேற்று நான் பாராளுமன்றத்துக்குப் போனபொழுது அரசியல விளங்காத சில நாதனமான மிருகங்களைக் கண்டேன். அவர்களைக் கண்டாலே ஒருவருக்கு ஒருகிழமைக்குப் பசி உண்டாகமாட்டாது. அவர்கள் பாராளுமன்றத்துக்குள் எப்படி வந்தார்களோ?" என்று டக்டர் பெரேரு அவர்கள் பேசியதாக 'டெயிலி நியூஸ்' 'அப்சேவர்' பத்திரிகைகளிற் காணக் கிடந்தது என்பதே குற்றச் சாட்டு.

திருவாளர்கள் பண்டாரநாயக, சுந்தரலிங்கம், தஹநாயக ஆகியோர் பேசும்போது குறித்த சிங்களப் பேச்சுச் சொல்லொடு பொருளாய் மொழி பெயர்த்துப் பார்க்கக் கூடாதென்றும் நகைச்சுவை விளைக்கும் கனிச மொழிகளை ஒதுக்கப்படக்கூடாதென்றும் அலவாவிடின் 'பஞ்ச்' முதலிய பல பத்திரிகைகளிலே வெளிவரும் படப் பரிகாசங்கள் ஒவ்வொன்றுக்கும் சங்கை கட்ட வழக்குத் தொடரக் கூடியதாயிருக்குமென்றும் எடுத்துக் காட்டி அக் காரணங்களாலே டக்டர் பெரேருவுடைய பேச்சுச் சபையின் விசேஷ உரிமைக்குப் பங்கமுண்டாக்கவில்லையென்று சாதித்தனர். சேர். கொத்தலாவலயின் பிரேரணைக்கு 70 வாக்குகள் சார்பாகவும் 21 எதிராகவும் இருந்தமையால் அங்கீகாரம் பெற்றது.

உ

பரவுவார்பாவம் பறைக்கும் அடி

திருச்சிற்றம்பலம்

அரவணையான்சிந்தித்தரற்றும்மடி
வருமறையான் சென்னிக்கணியாமடி
சரவணத்தான்கைதொழுதுசாரும்மடி
சார்ந்தார்கட்கெல்லாஞ்சரணுமடி
பரவுவார்பாவப்பறைக்குமடி
பதினெண்கணங்களும்பாடும்மடி
திரவுநீர்த்தெண்கெடிலநாடன்னடி
திருவீரட்டத்தானத்தெஞ்செல்வனடி.

திருச்சிற்றம்பலம்.

அரசியல் அலை

# உலக அமைதிக்கும் - - உழைக்கின்றார்களாம்!

## புரட்சிக் கொள்கையினரின் போலி முயற்சி

## கடவுட் பூசைக்குட் கரடி

பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடை என்றாலும் பாதகமில்லை. ஏதோ மேல் அடுக்குப் புளுகு என்று சொல்லலாம். மாமிசம் உண்ணும் புலி தாவரபோசன மகாநாட்டுக்குத் தலைமை வகிப்ப தென்றால் எவ்வாறிருக்கும்.

இலங்கை இந்திய மகாநாட்டின் தலைவர் திரு. அசீஸ் இப்பொழுது சத்தியாக்கிரகப் போர் ஆரம்பித்திருக்கின்றார். அதே பேர்வழி பொதுவுடைமைக் கட்சியினரின் பேராதரவில் ஒரு உலகசமாதான இயக்கத்திலும் உழைக்கப்போகிறாராம்.

'விலாங்குமதி என்ற ஒரு சொற்றொடர் உண்டு. பாம்பு மீன் என்ற இருவேறுசாதிப் பிராணிகளின் தன்மையை நோக்குக்கு நேரம் பொருத்திக்கொள்ளும இயல்பைக் குறிக்கும் இந்த முதுமொழியெனினும் பாம்பும் மீனும் ஒருவகையில் நீர்வாழ் தன்மையில் அவ்வளவு வேறுபாட்டுக்குரியன வென்று குறிப்பிட முடியாது. மர்க்கடம் மனித வேடம் போட்டாலும் அல்லது மனிதன் மர்க்கடவேடம் போட்டாலும் குற்றமில்லை. புலி, சிங்கம் மனித ரூபங் கொள்ள முடியுமா?

கடவுள்பூசை செய்யும் பொழுது கரடி புகுந்தாற்போல அறநெறியை அடிப்படையாகக்கொண்ட சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்தும் பெரியார் மறநெறியாளராம் பொதுவுடைமையினரின் போர்வையிற் புகுந்து உலக அமைதிக்கு உழைக்கப்போகின்றாராம். விடிந்தாற் தெரியும் என்று சொல்வார்கள் இது விடியுமுன் தெரிந்துவிட்டதே. திரு. அசீஸ் இலங்கை இந்திய மகாநாட்டுக்குத் தலைவராயும் பொதுவுடைமைக் கொள்கையினராயும் இருக்கின்றாரென்று இலங்கை இந்தியர்கள் அறிந்தபோதும். இனி இலங்கை இந்திய மகாநாட்டுக்கு நற்காலம்பிறந்துவிட்டது.

### திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி

சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த இந்துசாதன இதழில் அறியத் தந்தபடி மேற்படி ஆலயத்திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றதென்றும், திருப்பணிச் சபையாருள் ஒருவராகிய ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் திருக்கேதீச்சரத்திலேயே வசித்துத் திருப்பணிப் பொறுப் பேற்றுத் தொண்டாற்றுகிறாரென்றும் அறியவருகிறது. செவ்வாய்க்கிழமை 10-6-52 திருப்பணிக்கு தவுமாறு இந்துசாதனத்தில் விடுத்துள்ள வேண்டுகோளின்படி சைவமக்கள் இத்திருப்பணியிற் பங்குபற்றும் தருணம் வந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். நந்தன ஞு ஆனி மீ ௬
௨ உ வெள்ளிக்கிழமை


## பொதுவுடைமையினரின் போலிவேடம்

மாசாலம் என்பது பரத நாட்டிலாவது இலங்கைத் தீபகத்திலாவது அரசியலில் எப்போதாவது இருந்ததாக நாம் அறிந்ததில்லை. கட்சி முறையில் அரசியல் அமைக்கப்பட்ட பொழுதும் பெரும்பாலும் கொள்கைகள் திட்டவட்டமாகவே வரைவு செய்யப்பெற்றன. இடதுசாரியென்றால், பலாத்காரக் கொள்கையினர் என்பதை உடனே அறியலாம். இது ஒரு உண்மை. பொதுவுடைமையினர் நினைக்குந்தோறும் பேசும்பொழுதும் செயலாற்றுங்காலையும் புரட்சித் தேவதைக்குப் பூசனைசெய்தழைப்பார்கள். இந்தவித கோர மதத்தினர் ஆகிய பொதுவுடைமையினரில் ஒருவரான திரு. அசீஸ் எதுவிதத்திலும் புரட்சியை மனத்தினாற்றானும் நினைக்காத இலங்கை இந்தியர்களுக்குத் தலைவராக இருப்பதுமன்றி பலாத்காரத்தை நோன்பிருந்துஇலாது செய்ய அரும்பாடுபட்ட மகாத்மா காந்தி கையாண்ட புனித ஆயுதமாகிய 'சத்தியாக்கிரகத்தை' தானும் உபயோகிக்கிறேன் என்று உகைறியச் சொல்லிவிட்டதுமன்றி அதே குரலிற் பொதுவுடைமைத் தோழர் திரு கெனமனுடனதோளொடு தோள்நின்று ஒரு அமைதி அரங்கம் அமைக்க முற்பட்டிருப்பது ஒருகால் நகைப்பையும் மறுகாற் சீற்றத்தையும் இன்னொருகால் மன எழுச்சிலையயும் உண்டுபண்ணுகிறது.

பரம்பரையாகப் பழகிய சாத்விகத் தொண்டர்களாகிய இந்தியர்களைத் திரு. அஸிஸ் கேலி பண்ணுகின்றாரா? அல்லது ஏமாற்றுகின்றாரா? சாந்தமும் தயாள குணமும் படைத்த இலங்கையர்களைத் திரு. அஸிஸ் விலங்கினம் அல்லது தாவர வர்க்கம் என்று எண்ணுகின்றாரா? பாராளுமன்றத்திற்கு மனு அளிக்கச்சென்றபொழுது பாதுகாவலர்கள் திரு. அஸிஸ் தலைமையில் உள்ள பதின்மரை அப்புறப்படுத்தினார்கள், அடித்தார்கள், இடித்தார்கள், அடக்குமுறை செய்தார்கள் என்ற கூச்சல் எழும்பினதும் நாமும் அதைக் கண்டித்தோம். இப்பொழுது திரு. அஸிஸ் பொதுவுடைமையினரின் புறங்கடை நின்று 'அமைதிப்'போர்வையில் 'அமர்'க்களைகூவ முன்வந்திருப்பதை அறிந்து அதிசயங் கொள்கின்றோம்.

ருஷிய தேசத்தவர்களாவது அல்லது ஜர்மனிய நாட்டவர்களாவது எக்காலத்திலும் தாங்கள் அமைதியை அவாவுகின்றோம் என்றால் ஆராவது நம்புவார்களா? நம்பி அவர்களின்பின் செல்வார்களா? நாளிலும் பொழுதிலும் 'வீழ்க' 'வீழ்க' என்று இரத்தவெறிப் பேச்சுப்பேசிப் புரட்சிப் போராட்டத்தை மூலையிலும் முடுக்கிலும் எங்கணும் பரப்பக் கங்கணங் கொண்டு நிற்கும் பொதுவுடைமைக் கட்சியரின் தோழனாகத் திரு. அசீஸ் இருக்கின்றார் என்று பகிரங்கமாக அறிந்தபின்னுமா இவ்வித அசம்பாவிதக் கொள்கைகளுக்கெல்லாம் நேர் விரோதமான சாத்விகக் கொள்கையினரான இலங்கைஇந்தியர்கள் திரு. அசீசைத் தலைவராகக் கொள்வது?

இந்நாட்டவர்கள் இலங்கை இந்தியர்களின் வேண்டுகோளுக்கெல்லாம் தங்களாலியன்றளவில் உதவிபுரியவும் உணர்ச்சி காட்டவும் ஆயத்தமாக இருக்கின்றார்கள் என்பதை அறிந்திருக்கிற இலங்கைஇந்தியர்கள் மகாநாடு புரட்சிவாதி திரு. அசீஸ் வழிகாட்டப் பின்சென்றால் எங்கேசெல்வார்கள்? கலகம் குழப்பம் என்ற பள்ளத்தாக்கிலா அல்லது அமைதி என்கிற சமவெளியிலா? இலங்கை அரசாங்கத்தைக் குறைகூறுவதையும் தகைமையில்லாதவர்களின் தலைமை நாடுவதும் அன்னாரின் எண்ணம் போனவாறு இசைந்து நடப்பதுவும் இலங்கை இந்தியர்களுக்கு நன்மை பயவா என்பதை வெளிப்படையாகக் கூறுகின்றோம். எந்த ஒரு கட்சியின் மகத்துவத்தையும் அதன் தத்துவத்தையும் தலைவனின் நோக்கங்கள் கொள்கைகள் முதலியனவற்றைக் கொண்டே உலகம் அநுமானிப்பது வழக்கம்.

ஆகையால் இலங்கை இந்தியச் சகோதரர்களே, அன்னார் இயக்கும் மகாநாட்டு நிருவாகப் பொறுப்புடையவர்களே, செப்பக் கேண்மின்! பொதுவுடைமையைக் கனவிற்றானும் நினைக்கின்ற எவரும் இறைவன் உண்டென்ற மனப்பான்மையுடைய பொதுசன இயக்கத்திற்குத் தலைமை வகிக்க விட வொண்ணாது! பல்லாண்டுகளாக நீவிர் பாடுபட்டுத் தொண்டாற்றி முயன்று வந்த அரசியல் அலுவல்கள் ஒருவாறு நன்கமைய வேண்டுமே[illegible]னால் உங்கள் தலைவர் உண்மைச் சத்தியாக்கிரகி என்ற இலக்கணத்திற்குள்ளாகக் கூடிய கொள்கையும் செய்கையும் உடையராய் இருக்கின்றாரோ இல்லையோ என்பதை ஆராய்ந்து திரு. அசிசுக்[illegible] இயக்கத்திற்குத் தக ஒரு தலைவரைநியமிப்பீர்களாக.

## திருவடிக் குழம்பு பதிந்த திருக்கோயில்

நீற்றானை நீள்சடை மேல்நிறை வுள்ளதோர்
ஆற்றானை அழகமர் மென்முலை யாளையோர்
கூற்றானைக் குளிர்பொழிற் கோழம்பம் மேவிய
ஏற்றானை யேத்துமின் நும்மிடர் ஏகவே.

இத்தலம் காவிரித்தென்பால் முப்பத் தைந்தாவது திருத்தலம். உமையம்மையார் பசுவுருக் கொண்டு திருஆவடுதுறையானை வழிபட வரும்கால், ஆங்கு திருக்கால் குழம்பு பதிந்திடக் குழைந்த சிவலிங்கத் திருவடிவங் கண்டு மகிழ்ந்து வழிபட்டனர். ஆதலின் (குழம்பு பதிந்தமையின்) திருக்கோழம்பம் எனத்திருப்பெயர் பெற்றது.

இங்கு இறைவனை வழிபட விரும்புந் தொண்டர்களே எத்துவிராவின் துன்பங்கள், வல்வினைகள் நீங்கிட இனபுறவிர் எனத் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளாலும், நம்மையாளும் தலைவனானும் செல்வமாவானும் இறைவனே அவனே குருபரனாகி வந்து அடியார்க்கருள புரிவான்; இங்கு வழிபடுவோரே சாலச் சிறந்த சதுரர்; எனது உள்ளமும் இங்கு இறைவனை நினைத்தே உருகிடும்; இங்கு அன்புடைத் தொண்டர்களெல்லாம உலகினையும் ஆட்சி செய்வர் எனத் திருநாவுக்கரசு சுவாமிகளாலும் போற்றி அருளப்பெறும் சிறப்பினது இத்தலம்.

இறைவன் கோகிலேஸ்வரர். பசுவுருவாகி வழிபட்ட அம்மையார் திருக்கால குழம்பு பதிந்த அடையாளம விளங்கும் திருமுடி யுடைய அழகிய இலிங்கத் திருவடிவினர். இறைவி, சௌந்தரநாயகி.

இத்தலம் நரசிங்கன்பேட்டைப் புகைவண்டி நிலயத்திலிருந்து தென்கிழக்கே சுமார் நான்குமைல் தூரத்தில் உள்ளது. ஆடுதுறை புகைவண்டி நிலயத்திலிருந்து தென்கிழக்கே ஐந்து மைலில் உள்ள புதூரை (பஸ் வசதியுண்டு) அடைந்து வடகே ஒருமைல் தூரம் வயல்வழி சென்றால் இத்தலத்தை அடையலாம்.

வேழம் பத்தைவர் வேண்டிற்று வேண்டிப்போய்
ஆழும் பற்றிவீழ் வார்பல வாதர்கள்
கோழம் பத்துறை கூத்தன் குரைகழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே.

## சமத்துவம் கோரும் பெண்கள்

### கட்குடியிலும் சமத்துவம்

தொழிலாளர்களாகக் கடமையாற்றும் அநேக மனிதர்கள், தாம் வேலை முடிந்ததும் வீடு சென்றால் அங்கு தம் மனைவியர் முழுக் குடிவெறியுடன காட்சியளிக்கின்றார்களென முறையிடுகின்றனர். பெண்கள் தமது வேலை முடிந்தவுடன ஒன்றுகூடி ஓர் பானை நிறைந்த கள்ளை எல்லோரும் பகிர்ந்து குடிப்பதாகத் தெரிகின்றது. இதனால் ஆண்கள் தங்கள் உணவை உண்ணாது தம வேலைக்குச் செல்கின்றனர்.

இதனைப் பொலிசார் விசாரணை செய்கையில் இப்படியான நடத்தைகள் காங்கேசன் துறைப்பகுதியில நடைபெற்றதாகத் தெரிகின்றது. இம்மாதிரி ஆர் கடத்தைகள ஒரு போத்தல் கள் 25 சதம் விற்பனாலேயே நடைபெறுகின்றன.

### துவிச்சக்கரப் பந்தயத்தில் முதல்வெற்றி அடைந்த பெண்

100 மைல் தூரத்தை 4 மணித்தியாலம், 16 நிமிஷம் 1 செக்கனில், 27 வயதையுடைய மடேம் ஈலின் செறிடன என்னும் பெண் ஓடிமுடித்தார். இதுவே உலகத்தில் முதல்வெற்றியாகும். 1938ம் ஆண்டு மாக்றெற் வில்சன் என்னும் பெண் இத் தூரத்தை 4 மணி 30 நிமிஷம் 8 செக்கனில் ஓடியதின் பின். மேற் கூறிய பெண்ணே இந்தவெற்றியை இம்மாதம் 18ந் திகதி முடியடித்தார்.

## பாராளுமன்றத்தில்

பாராளுமன்றத்தில்தேர்தல் நிகழ்ச்சிகளை விசாரணை செய்ய வேண்டுமென்று திரு. S. W. R. D. பண்டாரநாயக கொண்டு வந்த பிரேரணை 44 அதிகப்படியான வாக்குகளாற் றோல்வியுற்றது.

## அளவுமிஞ்சிய ஆன்மசக்திப் பிரயோகம்!

நீர்கொழும்புப் பிரதிநிதி திரு. அமெயசிஙஹ அவர்களின் செரிவைப்பற்றி ஆட்சேபிக்கும் மநுப் பத்திரத்திற் காணப்படும் நியாயங்களில் ஒன்று அளவுமிஞ்சிய ஆன்மசக்திப் பிரயோகமென அறியவருகிறது.

## பத்திரிகை விலை

''நியுயோக் ரைம்ஸ்'' என்னும பத்திரிகைப் பிரதி ஒன்றின் விலை பதினைந்து சதத்தி[illegible] இருபது சதமாகக் கூட்டப்பட்டிருக்கின்றது. காரணம் செலவு அதிகரித்தமை என்று கூறப்படுகின்றது.

## தேர்தல் வெற்றிக்கு ஆட்சேபம்

சென்றதேர்தலில் பின்வரும் தொகுதிகளில் தெரியப்பட்ட அங்கத்தர்கள் வெற்றியை ஆட்சேபித்து உயர்தர நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை செய்வதற்கு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. சண்டி, களுத்தறை, பட்டிருப்பு, பொத்துவில், மட்டக்களப்பு, நாத்தாண்டிய, கல்முனை, சிலாபம், நீர்கொழும்பு, மாத்தளை.

## இலங்கா ஆயுர்வேத வைத்திய கலாசாலை யாழ்ப்பாணம்

### பரீட்சை முடிவு 1952

சென்ற மார்ச்சு மாதம் நடைபெற்ற வருடாந்தப் பரீட்சையில், சித்தியடைந்த மாணவர்களின் பெயர்களைத் தராதர ஒழுங்கின்படி வட இலங்கை சுதேச வைத்திய சபையார் வெளியிட்டிருக்கிறார்கள்.

நாலாம் வருடம் (D. A. M.)

| | |
|---|---|
| K. கணபதிப்பிள்ளை | II பிரிவு |
| S. குணரத்தினம் | II பிரிவு |
| T. தம்பிஐயா | II பிரிவு |
| M. நல்லதம்பி | III பிரிவு |
| S. அம்பலவாணர் | III பிரிவு |

இரண்டாம் வருடம் (S. A. M)

| | |
|---|---|
| G. சிவப்பிரகாசம் | III பிரிவு |
| S. கந்தையா | III பிரிவு |

முதலாம் வருடம் (Pre-Medical)

| | |
|---|---|
| V. இராமையா | III பிரிவு |
| S. தியாகராசா | III பிரிவு |

## செய்தித் திரட்டு

=O=

வாழைச்சேனைக் காகித உற்பத்திச்சாலையில் காகித உற்பத்தி செய்வதற்கு இலங்கையர் பதினறு பேர் இந்தியாவில் பயிற்சி பெறுவர்.

x x x

காத்தான்குடி திரு. மீராலெப்பை முகம்மது காசிம, திரு. R. B. கதிர்காமருடைய தெரிவை ஆட்சேபித்து மநுப்பண்ணியிருக்கிறார்.

x x x

பாராளுமன்ற மேற் சபை அங்கத்தவராக டக்டர் A. M. சமரசிங்ஹ, திரு. B. I. பனிபன, திரு. ஹமீஸ்றத்வத்த ஆகியோர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

x x x

பாராளுமன்றத்தைப் பங்குனி மாதம் 1-ந் திகதி கலைத்ததால் இப்பொழுது பாராளுமன்றம் இல்லாமல் இருக்கும அகிப்து தேசம் தமது தேர்தல்களை வருகிற ஐப்பசி மாதம நடத்துமென அறிய வருகின்றது.

x x x

தொழிற் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற A. E. குணசிங்கா அவர்களை இந்தோனேஷியாவுக்கு இலங்கைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு க. சே. த சே. கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் கீழ் விபரிக்கப்படும் நகைகளை ஜூலை மாதம் 12-7-52 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | 1948 | | |
| | திகதி | ரூ. | |
| 4871 | டிசம்பர் 24 | 10 | சங்கானை தம்பாபிள்ளை இராசதுரை சாதா மோதிரம் 1 |
| | 1949 | | |
| 6374 | பிப்ரவரி 25 | 15 | நெடுந்தீவு கந்தையா சுப்பிரமணியம் இலாவர் மோதிரம் 1 |
| 6522 | மார்ச் 5 | 176 | கலட்டி அ. சி. துரையப்பா குண்டு வைத்த முளுப்பவுண் 1 வெ. கல். கொண்டை பூ 1 |
| 438 | ஏப்ரல் 28 | 80 | சாவகச்சேரி K. பீட்டர் அலபட் சங்கிலி 1 |
| 1743 | யூலை 12 | 12 | கோண்டாவில் இரோட்டம் அ. நாராயணசாமி வெ. கல் தோடு சோடி 1 |
| 1816 | 16 | 30 | மாணிப்பாய் சரவணமுத்து செல்வராசன் தாலி 1 தடை 2 |
| 2184 | ஆகஸ்ற் 6 | 70 | நல்லூர் சின்னையா அப்பாத்துரை வயிரச்சகலம் 3 வைத்த தொங்கட்டான் 1 |
| 3186 | செப் 30 | 15 | சிராய்பியடி சி. க. முத்தையா சாதா மோதிரம் 1 |
| | 1950 | | |
| 4880 | ஜனவரி 5 | 17 | சிவியாதெருகிழக்கு சின்னத்தம்பி பெண் இராசம்மான் தாலி 1 |
| 5035 | 16 | 20 | புத்தூர் மேற்கு சின்னத்தம்பி வடிவேலு தாலி 1 மணி 2 |
| 5787 | பிப்ர 23 | 29 | கோண்டாவில் மேற்கு பொன்னையா குமாரசாமி முத்து சிகல் செம்பு சடை தாய்த்து 1 |
| 6339 | மார்ச் 29 | 10 | நாவற்குளி மருதர் ஞானமுத்து தாலி 1 |
| 247 | ஏப்ர 19 | 100 | குசவக்குளம் சரவணை தம்பையா அமரிக்கன் முளு டலர் 1 |
| 454 | மே 3 | 110 | குசவக்குளம் சரவணை தம்பையா சோடி மாறிய கை. சங்கிலி சோடி. 1 |
| 916 | யூன் 3 | 75 | இந்துகோலேச்சடி சி. சோமசுந்தரம் S இல்லாத அல்பட் சங்கிலி 1 வெ கல் புரோச் 1 |
| 1022 | 10 | 17 | சிவியாதெரு கணபதிப்பிள்ளை சின்னத்துரை சிறிது பெரிது மோதிரம் 2 |
| 1586 | யூலை 11 | 20 | நாவற்குளி கதிரவேலு பெண் தங்கமணி கெளி வளையல் சோடி 1 |
| 1719 | 18 | 50 | குசவக்குளம் சரவணை தம்பையா ½ டலருடன் முடிச்சுச்சங்கிலி 1 |
| 2467 | செப் 5 | 50 | நீராவியடி பொன்னையா கனகரெட்டினம் தாலி 1 |
| 2945 | அக்ரோ 9 | 150 | ஆனந்தவடலிரோட் சின்னத்தம்பி பெண் இராசம்மா செடி காப்பு சோடி 1 |
| 3020 | 13 | 190 | உடுவில் D. J. செல்லமன் முத்து கல் பெண்டனுடன டைமன் சங்கிலி 1 |
| 3488 | நவ 8 | 200 | புத்தூர் சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை குதிரைபவுண் ஒன்றுடன் அல்பட்சங்கிலி 1 |
| 3837 | 30 | 200 | 2ம் X த்தெரு K. M. மொய்தீன் வெ கல் பதைகத்துடன் சங்கிலி அட்டியல் 1 |
| 3876 | டிச 2 | 150 | சாவகச்சேரி பொன்னுச்சாமி தேவபாலன் வளையல் சோடி 1 சிந்தாமணிச்சங்கிலி 1 |
| 4122 | 18 | 160 | தலையாழி சின்னப்பா சுப்பிரமணியம் கல், கட்டிய முழு பவுண் ஒன்றுடன் வெந்தய கட்டை சங்கிலி 1 |
| 4166 | 20 | 30 | K. K. S. ரோட் 101 K. சின்னத்தம்பி வெ கல் புரோச் 1 |
| | 1951 | | |
| 4308 | ஜென 1 | 200 | கந்தர்மடம் சபாபதி சபாரெட்டினம் கல் பெண்டனுடன் சிந்தாமணி சங்கிலி 1 வேலை செய்த குதிரை பவுண் 1 |
| 4599 | 20 | 100 | இந்துகோலேச்சடி ஓ. பசுபதி ருத்ருச்சக்காய் 1 ஒப்பல் கல் மோதிரம் 1 வெ கல் புரோச் 1 |
| 4642 | 22 | 75 | அராலிகிழக்கு ஆறுமுகம் மாரிமுத்து செகி கல் பெண்டன் 1 |
| 4720 | 26 | 50 | சிவன்கோவில் சின்னத்தம்பி வைத்திலிங்கம் நீல கல் புரோச் 1 |
| 4770 | 29 | 150 | உடுவில் A. W. தங்கராசா மணிச்சங்கிலி 1 |
| 4809 | பிப்ர 1 | 25 | மண்டைதீவு யோபான் செபஸ்தி கல் வில்லாத மோதிரம் 1 |
| 4817 | பிப்ர 1 | 30 | கன்னாதிட்டி சின்னத்தம்பி கனகரெட்னம் தாலி 1. கல் மோதிரம் 1 |
| 4847 | 3 | 95 | காச்சிமாகோவிலடி கந்தையா மாசிலா மணி றேடியோ வளையல் 1 |
| 5136 | 21 | 85 | பெருமாள் கோவிலடி சின்னப்பா குமார சாமி வெள்ளைக்கல்மாலை செட்பதக்கம் 1 |
| 5151 | 22 | 70 | மானிப்பாய்றோட் NO. 3. S. தரும லிங்கம் சில கல் விழுந்த கல் & சாதா மோதிரம் 2 |
| 5295 | மார்ச் 1 | 125 | கட்டுவன் தெல்லிப்பளை சா. மயிலு கந்தையா செடி ½ பவுண் 1 கோர்த்த சங்கிலி 1 |
| 5351 | 5 | 140 | K.K.S.றோட்டு NO. 206. K. கோவிந்தன் றேடியோ வளையல் சோடி 1 |
| 5375 | 6 | 15 | இளிகொச்சி சி. பூலோகசிங்கம் சாதா மோதிரம் 1 |
| 5487 | 14 | 80 | தட்டாதெரு சங்கக்கடை பொன்னையா தனபாலசிங்கம் பிரவுண் பெண்டனுடன் சிந்தாமணிச் சங்கிலி 1 |
| 5499 | 15 | 50 | உடுவில் சின்னத்தம்பி இராமலிங்கம் றேடியோ வளையல் சோடி 1½ |
| 5546 | 19 | 25 | நாவாந்துறை றோட் S. M, சுல்தான் வளையல் சோடி 1 |
| 5555 | | 25 | அராலி ஆறுமுகம் மாரிமுத்து இறு மல் மோதிரம் 1 |
| 5658 | 28 | 125 | பெருமாள் கோவிலடி பொன்னம்பலம் தம்பிஅப்பா குண்டுச் சங்கிலி 1 |
| 5696 | 31 | 90 | கொட்டடி வே. பாலசுப்பிரமணியம் வெள்ளைக் கல் செட்புறூச் 1 கொ. புறூச் 1 |

வண்ணார்பண்ணை,
18—6—52.

சி. பசுபதிச்செட்டியார்
வெந்தீஸ்மேஸ்தர்

( M. 43 20, 24—6—52. )

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 22—6—52——28—6—52

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் அமைதியாயிருந்தால் அதிகலாபமுண்டு. சமுகசித்தியம் போட்டியில் வெற்றியும் நிச்சயம் வாரஇறுதிக்குமுன் ஒருபழைய சிக்கலானவிஷயம்சரிவரக்கூடும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.**

சில சொந்தச்சிக்கல்கள் உண்டாகும். பிறர் காரியங்களால் சலனப்படநேரிடும். சலனத்தை நீக்கிக் கையிலிருக்கும் வேலையில் கவனம் செலுத்தினால் தகுந்த நன்மையுண்டாகும். வாரஇறுதியில் வாக்குவாதத்தையும் அவசர தீர்மானத்தையும் தவிர்க்கவும்.

**மிதுனராசி மிருகசிரிடம், 3.4, திருவாதிரை, புனர்பூசம் 1.2.3.**

சொந்த விஷயத்தில் தொந்தரவானகாலம். மனச்சலனமுமுண்டு ஆனால் தனலாபமும் வியாபார சித்தியுமுண்டு. தேசசுகம் தொந்தரவுசெய்யக்கூடும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் நெருங்கிய ஒருநண்பனோடு திருத்தியீனமுண்டாகக் கூடும். மறந்த ஒருபழைய சிக்கல் திரும்பவும்புதிதாயுண்டாகக்கூடும். ஆனால் சிறிது கஷ்டப்பட்டுச்சமாளிக்கக்கூடியதாயிருக்கும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.**

சொந்தக்காரியங்களில் மிகச்சந்தோஷமானவாரமாயிருக்கும். சமுகசித்தியும் நிச்சயம். சூதைத்தவிர்த்து வழக்கமானவழியில் நின்றால் இலாபமடைதல் நிச்சயம். வாரஇறுதியில் புதுக்காரியங்கள்கவனமாய்ச் செய்யவேண்டும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் அதிகம் செலவழிக்கநேரிடக்கூடும். சமுக, வியாபார முயற்சிகள் சிறிது தடைப்படக்கூடும். வார இறுதியில் சில சொந்தச் சிக்கல்கள் தீர்குதற்குப் புதுநண்பர் பிரயோசனப்படுவர்.

**துலாம் சித்திரை 3.4ம்பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

ஞாயிறு திங்களும் செவ்வாய் சாலையும் அச்சத்தையும் ஆறுதலின்மையையும் விளைக்கக்கூடும். செவ்வாயின் பின் திருந்தும். வாரஇறுதியில் புதுமுயற்சி சித்தியும் நண்பரால் இலாபமுமுண்டு.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

வழக்கமான அலுவல்களுக்கு வாரத்தின் முதல் இரண்டு நாட்களும் நன்று. செவ்வாய் பிற்பகல் புதன், வியாழன் குற்றமானநாட்கள், சிறு இடையூறுகளுக்கு அல்லது காய்ச்சலுக்கு இடமுண்டு. வார இறுதி திருத்தத்தைத் தரும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.**

சனி இரு நாட்கள் தவிர இந்தவாரம் நல்லகாலம். நல்ல வியாபார சித்தியும் பணவரவும் நிச்சயம். தொடங்கியகருமங்களுடன் முன்னேறுக. வார இறுதியில் குடும்பத் தொந்தரவுண்டாகக் கூடும்.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

சொந்தமுயற்சிக்கும் வியாபார முயற்சிக்கும் நல்லவாரம். எதிர்ப்பு ஒழிந்து புதுமுயற்சிகளிற் சித்தியுண்டாகும். பழைய பணமுங்கூட காத்திராத நன்மையைத்தரும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

சொந்தவிஷயத்தில் தொந்தரவுள்ளவாரம். விசேஷ விஷயங்களில் புது நண்பரை நம்பியிருக்க வேண்டாம். கவனமாயிராவிட்டால் கந்தோரிலே பழிக்காளாகக் கூடும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இந்த வாரம் விநோதமான சமுகத்தொடர்புகளுண்டாகும் போட்டியிடுவோரை வெல்லுவது நிச்சயம். வார இறுதியில் கற்பனை செய்த சில முயற்சிகளில் சித்தியடைதல் நிச்சயம்.

## வித்தியாவிருத்திப் பணம்பெற்ற மாணவி உற்சாகம் ஊட்ட உபசார உரை

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் கல்வி பயின்று இவ்வாண்டு வித்தியாவிருத்திப்பணம் பெற்று, அரசினர் மத்திய கல்லூரிக்குக் கல்வியிலச் செல்லும் மாணவி க. நாகம்மாவுக்கு மேலும் உற்சாகமூட்டுவதற்காகச் சென்ற கிழமை சகலகலாவல்லி வித்தியாசாலையில் தலைமையாசிரியர், திரு.கா. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில ஒரு கூட்டம் நடந்தது. அக் கூட்டத்தில தலைமை ஆசிரியரும், மற்றைய ஆசிரியர்களான செல்வி நாகேஸ்வரி S, திரு. N. கரல்கேயர், திரு. K. மார்க்கண்டு என்பவர்களும், மாணவியின் கீழ்ப்படிவு, நல்லொழுக்கம், திறமை என்பவற்றால் எல்லாரும் போற்றும் முறையில் வளர்ந்து வருவதாய்ப் பாராட்டிப் பேசினர். மாணவர்களும் புகழ்ந்து பாராட்டினர். பின் க. நாகம்மாவுக்கு, அன்பளிப்பாகச் சில புத்தகங்கள் வழங்கப்பட்டன. பின் நாகம்மா தலைமைக் குறித்த கிலைக்கு வாசச்செய்த ஆசிரியர்கட்கும், ஏனையோர்க்கும் நன்றி தெரிவித்தார்.

## அறிவித்தல்

கொக்குவில் கிராமச் சங்கத்திலுள்ள மஞ்சத்தடி றோட்டின் மிகுதியை அமைத்துக்கொடுக்க 1952-ம் ஆண்டு ஜூன் 28-ம் திகதி காலை 9 மணிவரை கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்கப்படும்.

கேள்விப்பத்திரப் பிணைப்பணமாக ரூபா இருபத்தைந்து 1952ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் திகதி 4மணிக்குமுன் இச்சங்கக்கந்தோரில் கட்டியவர்களுக்கே கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்,

மேலும் தேவையான விபரங்களை எனது கந்தோரிற் பெற்றுக் கொள்ளலாம்.

வடபகுதி உதவி ஸ்தலஸ்தாபன அதிபர் கந்தோரில் (A - B) பிரிவுகளில் பதியப்பட்ட நாமவளிகளுக்கே கேள்விப் பத்திரங்கள் வழங்கப் படும்.

சி. அருளம்பலம்
தலைவர்
கொக்குவில் கிராமச்சங்கம்

V. C. Office Kokuvil
16—6—52.
M. 45 20—6—52.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் ஆதிகுமரகுருபர சுவாமிகள் குருபூசைகள்

நிகழும் வைகாசி மாதம் உ௯-ம் திகதி 9.6.52 திங்கட்கிழமை திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரவர்களதும் அடுத்த நாளாகிய 10.6.52 செவ்வாய்க்கிழமை காசிமடஸ்தாபகர் ஆதிகுமாரகுருபர சுவாமிகளவர்களதும் பூசைகள் வழமைபோன்று பெட்டியகலைத் தமிழ்ப்பாடசாலையில் நடத்தப்பெற்றன. இரண்டாம் நாளாகிய செவ்வாய்க்கிழமை பிற்பகல் சுவாமிகளின சரித்திரம் பாடசாலை மாணவர்களால் மனனப் பிரசங்கம் செய்யப்பட்டது, திருச்செந்தூர்க் கந்தர் கலி வெண்பா ஓதப்பட்டது.

ஈற்றில் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. நடராஜசங்கர பண்டிதரவர்கள குமரகுருபர சுவாமிகளைப்பற்றிப் பேசும் பொழுது இக் குமரகுருபர சுவாமிகளுடன தொடர்புடையவர்களாகிய தருமபுர ஆதீன அதிபரவர்களும் திருப்பனந்தாள் ஆதீன அதிபர் அவர்களும் இளவரசு வித்துவான் ஸ்ரீ மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகளவர்களும தமிழ்விருத்தியின்பொருட்டும் சைவசமயாபிவிருத்தியின் பொருட்டும் செய்துவரும் பணிகளைப் பற்றிப் புகழ்ந்து பேசினர்.

**கற்றவர்க்கழகு கசடற மொழிதல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கில் சோம.மு இராமனுதன் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணைதப்பி எடுபடாமல் இருக்கும் கீழ் விபரிக்கப்படும் நகைகளை 19-7-52 சனிக்கிழமை காலை 10 மணிதொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| நம்பர் | ஒ மீ உ | | ரூபா | ஊர் பெயர் நகை விபரம் |
|---|---|---|---|---|
| | 1951 | | | |
| 40 | மார்ச்சு | 22 | 25 | திண்ணவேலி கிழக்கு கணபதிப்பிள்ளை செல்லத்துரை தாலி (1) |
| 50 | ,, | 24 | 41 | பிச்சகுளம் ரோட்டு S M. முகைதீன் சாதா மோதிரம் (1) |
| 189 | ஏப்பிரல் | 13 | 150 | சுண்டிக்குளி வயிரவப்பிள்ளை சண்முகராசா பளுதும் சில கல்லுமில்லாத மாலைப் பெண்டன் (1) |
| 192 | ,, | 13 | 20 | தட்டாதெரு சின்னத்தம்பி சுக்சைாமி பத்தர் தாலி (1) |
| 213 | ,, | 17 | 230 | திண்ணவேலி தெற்கு வே. சுப்பிரமணியம் செளி வளையல் சோடி (2) கல்மோதிரம் (1) |
| 257 | ,, | 23 | 50 | பிராம்பத்தை மூ பொ. தம்பிமுத்து சிறு செளி வளையல் சோடி (1) |
| 280 | ,, | 26 | 240 | பாக்கியப்பாலேன் 12. M. M. கவ்வுதுவெ கல் பெண்டனுடன் ஒற்றைக் குண்டு அட்டியல் (1) சிறு மோதிரம் (1) |
| 288 | ,, | 28 | 25 | நாவாந்துறை வடக்கு மரியாம்பிள்ளை யோன்பிள்ளை சிசப்புக்கல் தோடு சோடி (1) |
| 298 | ,, | 30 | 20 | காவலர் ரோட்டு பொன்னம்பலம் சண்முகம் முத்துக்கல் கிளாவர்க் குச்சு சோடி (1) |
| 408 | மே | 16 | 25 | தாவடி செ. அப்புத்துரை கல்மோதிரம் (1) |

19 7-52 சனிக்கிழமை காலை 10 மணி முதல், வேந்தீசு நடைபெறும்

சி. பசுபதிச்செட்டியார்
வெந்தீஸ் மேஸ்தர்.

M. 44 20, 24—6—52.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE



நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.

## திருக்குறள் காட்டுந் தெய்வநெறி

(முதற் பக்கத் தொடர்ச்சி)

டோம்; ஆய்ந்தோம்; அமைந்தோம். இப்பொழுது நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டாமா? சமயம் என்பதுதான் என்ன? நல்ல வாழ்க்கை வாழ குணங்களைச் சமைப்பது சமயம். அது சமைத்து நமக்கு ஒன்றை அளிக்கிறது. அது என்ன? அதுதான் பண்பு. பண்பின் வழிப்படுவது தானே சமயம்?

(சித்தாந்தம்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோண்டாவில் - மாசிமுத்து
சைம்பெண் சின்னதங்கம்
வழக்காளி.

இல. 7716 எதிராக

கோண்டாவில்:
1. மார்க்கண்டு செல்லையா
2. ,, சின்னத்துரை
3. ,, பொன்னையா
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 7716 - ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1952ஞு ஆடிமீ 25உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை, கோண்டாவில் "குருமணவயடி கொச்சியடி' கள்ளியடி" நிலப்பரப்பு $6\frac{1}{4}$, வீடுகளும் பயிர் வகைகளும் மேற்செல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப் பங்கும் - எல்லை கிழக்கு இத்தினி பெண் செல்லம் - வடக்கு ரோட்டு, மேற்கு சின்னப்பு கணபதியும் பங்காளரும், தெற்கு சின்னத்தம்பி பெண் சின்னத்தங்கமும் நாசமுத்து பெண் அம்மாகுட்டியும் இதடங்களில் சொரியலாக அவைவாசி.


S. RATNASABAPATHY,
Commissioner of Sales.
16-6-52.
M. 46 20—6—52.

○ நீங்கள் இளமைப்பருவத்தை அடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதிஅற்புத சுகந்தரும். நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0
குருபஸ்பம் (தொய்வுக்கு)
தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும்.
அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனம்)
M. 16. 25-4-52—25-10-52.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம்ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்
திறமான
ருணிமார்க்ஓடுகள்
$13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2

"பத்திரானஸ்"
இதுவே அருந் தருணம்!



உங்கள் கண், பல் என்பனவற்றைச்
சோதிப்பிக்கத் தவறுதீர்கள்
சோதப்பித்துச் சிகிச்சை செய்தற்காகிய இந்தத் தருணத்தைத் தவற விடாதீர்கள். எங்கள் நீண்டகால அநுபவமும் சேவையும் உங்களைப் பூரண திருப்திப்படுத்தும் தற்கால சாஸ்திரீய உபகரணங்கள எங்கள் வசம் இருக்கின்றன. மேலும் எங்களிடமுள்ள அழகிய புது மாதிரியான செயற்கைப் பல்வரிசைகள் நீடித்தகாலம் நின்று பிடிக்கக்கூடியன என்பதை உங்களுக்கு அறிவிக்கின்றோம்.
போன் இல. 271
(கிளைத்தாபனம்)
22, கண்டிரோட், குருநாகல்.
111, முதல் டிவிஷன், மருதானை.
"பத்திரானஸ்"
தந்த நயன வைத்தியசாலை
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்
PATHIRANAS
Dental Laboratory & Optical Works
28, Main Street, Jaffna

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday. June 20. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org